# அன்னபூரணி தோத்திரம்



நித்தியஆனந்தம் தருபவளே பயமில்லாவரம் தருபவளே
சத்தியமான அழகே புத்தியை பொலிவாக்குபவளே
கண்ணுக்குத் தெளிவாய் காட்சி ஆனவளே
மண்ணின் தலைமுறை மலைவழி காப்பவளே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

இரத்தினங்கள் பளபளக்க இனிதாய் ஜொலிப்பவளே
அத்தனையும் மின்னிடும் அழகான தங்கமே
முத்து மாலைகள் முத்தமிடும் பேரொளியே
எத்திசையும் மணக்கும் எழில்மிகு வாசமே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

யோகத்தின் ஆனந்தமே மோகத்தை அழிப்பவளே
ஏகமான தருமத்தின் இலக்கான செல்வமே
பூவுலகின் பொலிவான பேரொளி பிரகாசமே
மூவுலகம் காப்பவளே முக்தியை அளிப்பவளே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

கயிலை மலையில் கருத்துடன் வசிப்பவளே
உயிரின் கௌரியே உமையே சங்கரியே
நியமத்தை எளிதாக்கும் நித்திய கௌமாரியே
உயரிய மோட்சத்தின் உத்தம ஓங்காரமே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

தெரிந்தும் தெரியாமலும் திசையெங்கும் இருப்பவளே
விரிந்த அண்டத்தை விசையாய் உள்ளடக்கியவளே
கலையாய் நாடகத்தை கருத்தாய் நடத்துபவளே
அலையும் மனத்தை அடக்கி ஆள்பவளே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

புவனத்தில் நிறைந்த பூமாதேவியே அன்னபூரணியே
கவரும் கருங்கூந்தல் அலையாய் கொண்டவளே
எப்போதும் தப்பாது எங்களுக்கு அன்னமளிப்பாயே
மட்டில்லா ஆனந்தமே மங்களம் எப்போதுமே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

ஆதியும் அந்தமும் ஆனவளே முக்குணதேவியே
ஜோதியாய் செந்நிறமாய் சங்கம சக்தியே
விதையாய் வித்தாய் விரிந்திடும் பூரணமே
அதையும் இதையும் அனைத்தும் தருபவளே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

விதவித இரத்தினமாய் வீற்றிடும் அழகே
இடக்கையில் பாயசம் இனிப்பாய் தருபவளே
தட்சன் மகளாய் தாட்சண்யம் தருபவளே
பக்தர் வேண்டியதை பரவசமாய் அளிப்பவளே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

கோடிகோடி சூர்ய சந்திர அக்னி பேரொளியே
பாடிய அழகில் பவித்திர சந்திரகுளுமையே
வீசிடும் ஒளியில் விரிந்த பிரகாசகூந்தலே
பேசிடும் அழகே பிரம்மாண்ட அறிவே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

பயமறுக்கும் வீரியசக்தியே கருணைக் கடலே
பிறப்பறுக்கும் முக்தியே பிழையில்லா பொலிவே
அகந்தை அழிக்கும் அழிவில்லா ஞானமே
அகத்தை தூய்மையாக்கும் ஆனந்த சக்தியே
இன்னலைப் போக்கும் இனியகாசியில் வசிப்பவளே
அன்னத்தை அருளிடும் அழகான அன்னையே

அன்னபூரணியே அழியாத பூரணமே
மின்னலாய் சங்கரனின் மிளிரும் உயிரே
ஞான வைராக்கியம் ஞாலத்தில் பெற்றிட
ஆனந்தம் பிச்சையாய் அளிப்பாய் அன்னையே
அன்னையாய் தந்தையாய் அகிலம் காப்பவளே
உன்னைத் தொழுவாரே உலகம்பரவிய நண்பரே

ஆதிசங்கரரின் அன்னபூரணி தோத்திரத்தின் தமிழாக்கம். வாகாய் எனக்குள் வார்த்தைகளைப் பொழியும் அன்னையே! நீ அருளிய இப்பாடலில் பிழையிருந்தால் நீயே பொறுத்தருள்வாயாக .